JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw- 1 Witness
for Prosecution

| STC.No. | 321/2022 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| Name | **Pw1 சீனிவாசன்** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 18.03.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிரி என்னிடம் பணம் கேட்ட 05.01.2022 அன்றைய தினமே பணம் ரூ.30,00,000/- கொடுக்காததற்கு எந்த காரணமும் இல்லை என்றால், பணத்தை நான் தயார் செய்துவிட்டு தருவதாக கூறினேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால், சிந்து ராஜா இன்ஜினியரிங் என்கிற பெயரில் டைனிங் டேபிள் கடை வைத்து நடத்தி வருகிறேன். மேற்படி கடையை நான் எத்தனை வருடங்களாக நடத்தி வருகிறேன் என்றால், சுமார் 25 வருடங்களாக நடத்தி வருகிறேன். மேற்படி கடையில் எவ்வளவு லாபம் வரும் என்றால், வருடம் சுமார் 20 இலிருந்து 25 லட்சம் வரை வரும். எனது கடையின் பெயரில் வங்கி கணக்கு உள்ளது என்றால், சரிதான்.

மேற்படி கடைக்கு நான் வருமான வரி தாக்கல் செய்கிறேன் என்றால், சரிதான். மேற்படி கடையில் இருந்து வரும் வருமானம் குறித்து முறையாக கணக்கு பராமரித்து வருகிறேன் என்றால், சரிதான். 05.01.2022 தேதியில் எனது கடையில் வந்த வருமானம் குறித்து எந்த ஒரு ஆவணமும் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

மேலும், நான் எதிரிக்கு 18.01.2022-ம் தேதி தான் பணம் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். 05.01.2022 தேதி முதல்18.01.2022 தேதிக்குள் ரூ.30,00,000/- எவ்வாறு எனக்கு வந்தது என்பது குறித்து எந்த ஒரு ஆவணமும் நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணத்தை எனது வருமான வரி கணக்கில் காட்டி

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.18 18:20:29 +0530

உள்ளேனா என்றால், எனது வருமான வரி கணக்கில் காட்டவில்லை. 18.01.2022 தேதி பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தொகைக்கு எந்த ஒரு ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றால், சரிதான். நான் எதிரிக்கு ரூ.30,00,000/– கொடுத்ததாக சொல்லப்படும் தொகைக்கு வட்டி எதுவும் நிர்ணயம் செய்ததாக எனது புகார், முதல் விசாரணை மற்றும் சட்ட அறிவிப்பில் கூறவில்லை என்றால், சரிதான்.

மேலும், எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் ரூபாய் ரூ.30,00,000/– பணத்திற்கு ஆதரவாக காசோலையை தவிர எந்த ஒரு ஆவணமும் வாங்கவில்லை என்றால், சரிதான். 05.01.2022 தேதிக்கு முன்பு எதிரியை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், எதிரியின் பெரியம்மா மகன் சுகுமார் என்பவர் மூலம் அறிமுகமானார். நான் எனது தங்கையின் கணவர் மற்றும் எதிரியின் பெரியப்பா மகன் சுகுமார் ஆகியோர் Royal Safe Finance என்கிற பெயரில் பைனான்ஸ் நிறுவனம் நடத்தி வருகிறோம் என்றால், சரிதான். Royal Safe Finance மற்றும் Royal Universal Finance ஆகிய இரண்டு பைனாஸ்களிலும் நான் தங்கை சத்யபிரியா மற்றும் அவரது கணவர் அன்பழகன் மற்றும் சுகுமார் உட்பட 10 பேர் அதில் பங்குதாரர்கள் என்றால், சரிதான்.

மேற்படி இரண்டு நிறுவனங்களும் பதிவு செய்யப்பட்ட பைனான்ஸ் நிறுவனம் என்றால், சரிதான். மேற்படி இரண்டு நிறுவனத்திற்கும் வருமான வரி செலுத்தி வருகிறோம் என்றால், சரிதான். மேற்படி இரண்டு பைனான்ஸ் நிறுவனங்களிலிருந்து வரும் வருமானத்தை காட்ட நான் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். 05.01.2022 தேதிக்கு முன்பு இந்த வழக்கின் எதிரி எனக்கு எந்த வகையிலும் பழக்கம் இல்லை என்றால், சரியல்ல. சுகுமார் என்பவர் எதிரியை அறிமுகப்படுத்தியதன் மூலம் நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால், சரிதான். சுகுமார் அவருக்கு தெரிந்த நபர்களுக்கு பைனான்ஸிற்கு பணம் கொடுக்கிறார் என்றால், சரிதான். நாங்கள் நடத்தி வரும் Royal Safe Finance மற்றும் Royal Universal Finance பைனான்ஸ் நிறுவனத்திற்கு வாடிக்கையாளர்களை சுகுமாரன் அறிமுகம் செய்வார் என்றால், சரியல்ல. பங்குதாரர் மட்டுமே அவர்.

மேலும், சுகுமாரன் என்பவருக்கும் ஆஜர் எதிரிக்கும் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. சுகுமாரன் எதிரிக்கு பணம் கொடுக்குமாறு என்னிடம் எப்போதாவது கேட்டாரா என்றால், அவ்வாறு எதுவும் அவர் கேட்டதில்லை. 05.01.2022தேதிக்கு முன்பு சுகுமார் இந்த வழக்கின் எதிரியை எங்கு வைத்து அறிமுகம் செய்து வைத்தார் என்றால், Royal Universal Financeல் வைத்து அறிமுகம் செய்து வைத்தார். Royal Universal Finance வைத்து அறிமுகம் செய்த போது எதிரி என்னிடம் எந்த பணமும் கேட்கவில்லை என்றால், சரிதான். எதிரியின் சொந்த ஊர் மற்றும் அவரது பெயரில் உள்ள சொத்துக்கள் விவரம் எனக்கு தெரியுமா என்றால் எதிரியின் சொந்த ஊர் வெள்ளித்திருப்பூர். அவரது சொத்துக்கள் வெள்ளி திருப்பூரில் உள்ளது மற்றும் கோவையில் Call for cake வைத்து நடத்தி வருகிறார். 05.01.2022 Royal Safe Finance மற்றும் Royal Universal Finance எதிரியுடன் கொடுக்கல் வாங்கல் மற்றும்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.18 18:20:35 +0530

சீட்டு நிகழ்வுகளில் சுகுமாரன் கலந்து கொண்டது எனக்கு தெரியுமா என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. Royal Safe Finance மற்றும் Royal Universal Finance இரண்டு பைனான்ஸ்களிலும் நிர்வாக இயக்குனர் அன்பழகன் தான் என்றால், சரிதான்.

மேலும், நான் இந்த வழக்கின் எதிரியை தவிர வேறு யாராவது மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் எதிரியைத் தவிர யார் மீதும் காசோலை வழக்கு தாக்கல் செய்யவில்லை. எனக்கு ஒரு நபருக்கு ரூ.30,00,000/- கடன் கொடுப்பது பெரிய தொகை என்றால், சரிதான். எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் பணத்திற்கு வட்டி எதுவும் நிர்ணயம் செய்யாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால், அவர் தொழிலுக்கு வேண்டும் என்று கேட்டதால் கொடுத்தேன். எதிரி எனக்கு உறவினர் இல்லை என்றால், சரிதான். நட்பு மற்றும் தெரிந்த நபர் ஆவார். 05.01.2022 முன்பு எத்தனை வருடங்களாக எதிரியை எனக்கு தெரியும் என்றால், சுமார் 10 வருடங்களாக தெரியும்.

**எதிரி தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.18 18:20:41 +0530

Sd/- (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**